1969 மார்ச் 6]

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான, அவசியமான இடங்களில் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ, மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கோ அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கலெக்டர்களுக்குத்தான் அந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எங்கே பற்றுக்குறை இருக்கிறதோ அங்கே தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வகை செய்யப்பட்டிருக் கிறது. 9–30 பி.ப.

திரு. சி. கே. சின்னராஜ் கவுண்டர் : பஞ்ச நிவாரண வேலைக்காக 30 லட்சம் ரூபாய் அந்த மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தில் சிறு அணைகளைக் கட்ட அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி . இது ரேஷன் பற்றியது. அணைக்கட்டுகள் பற்றியது அல்ல. மக்களது வாங்கும் சக்தியைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இது செய்யப்படுகிறது.

திரு. என். துரைபாண்டியன் : சில ஊர்களில் நாம் ரேஷன் போட வில்லை. கார்டு கொடுக்கவில்லை. அரிசியே கொடுப்பது இல்லை. அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அரிசி கொடுக்கவேண்டும் என்று வியாபாரி கள் வாங்கிக்கொண்டு வந்தால் அதையாவது அரசாங்கம் தடைசெய்யாமல் இருக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரிசி கடத்திச் செல்வதை அரசாங்கம் அனுமதிக்காது.

* 190. வினு—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 1968 அக்டோபர் மாதத்தில் தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 1968 அக்டோபர் திங்களில் 2,377 டன் அரிசி கிடைக்கும் வகையில் குறுவை நெல் பெறப்பட்டது. இதில் பாதியளவு சென்னை மாநகரின் தேவைகளை ஈடு செய்வதற்கெனக் கருதப் பட்டது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : செங்கல்பட்டு மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நெல்லில் அந்தப் பகுதிக்காக ஒதுக்கப்படுவது எவ்வளவு ? மற்ற ஏரியாக்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பாதி அளவு சென்னைக்கு ஒதுக்கப்படுகிறது. மீதியுள்ளது தான் அங்கங்கே கொடுக்கப்படுகிறது.

2. நடைமுறைக் கேள்விகள்.

அ. துணை வினுக்கள் கேட்க சந்தர்ப்பம் கிடைக்காமை குறித்து.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கடைக் கோடியில் இருக்கிற எங்கள் மீதும் தங்கள் பார்வை விழவேண்டும். மணிக் கணக்கில் கையை உயர்த்திக் கொண்டிருந்தாலும் கேள்வி கேட்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கோடியில் இருக்கிற திரு. கோமதிசங்கர தீட்சிதர் என் கண்ணில்படுகிறபோது திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கண்ணில்படவில்லை என்று சொல்ல முடியாது.

எல்லோருமே கையைத் தூக்குகிறார்கள். நானும் கேள்விகள் போடாதவர்கள் வாரியாக, கட்சிவாரியாக—முறையாகத்தான் கேள்விபோட அனுமதித்து வருகிறேன்.

திரு. ஆர். கருப்பையா : ஒரு மணி நேரமாகக் கையைத் தூக்கிக் கொண்டிருந்தும் ஒரு கேள்வி கூட அனுமதிப்பதில்லை. நேற்று முழுவதும் நான் கையைத் தூக்கிப் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கருப்பையா அவர்கள் இப்படிச் சொல்வதை நான் ஏற்க முடியாது. வேண்டுமென்றால் அவர்களுக்கு எவ்வளவு துணைக் கேள்வி போட அனுமதித்திருக்கிறேன் என்பதற்கான விவரங்களைத் தருகிறேன். இந்தக் கேள்வி செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தது. ஆகவே, கேள்வியின் பொருளையும் வைத்துக்கொண்டு இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பாரபட்சமாகப் பார்க்காமல்—கேள்வியின் பொருளையும் சபையின் காலத்தையும் கருத்தில் கொண்டு முறையாகக் கேள்வி கேட்க அனுமதிக்கிறேன். 234 மெம்பர்களையும் கேள்வி கேட்க அனுமதிப்பது என்பது முடியாத காரியம்.

திரு. தீர்த்தகிரி கவுண்டர் : என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் ஒரு கேள்வி கேட்க என்னை அனுமதிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன். ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர்களுடைய தொகுதிபற்றிக் கேட்க அனுமதிப்பது என்றால் நேரம் இல்லை. அதைப்பற்றி நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் சொல்லிக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்பது முறை. இப்போது எழுப்பியிருக்கிறார்களே, அதற்குத் தங்கள் பதில் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

1. **வினாக்கள் விடைகள்**—தொடர்ச்சி.

திரு. முனு ஆதி : செங்கல்பட்டு மாவட்டத்திலேயே பற்றாக்குறை இருக்கும்போது இதற்காக ஒதுக்கப்பட்டதில் 2,377 டன் சென்னைக்கு அனுப்பி விடுகிறார்களே, இப்படி இல்லாது எங்கள் மாவட்டத்துக் கொள்முதலை எங்கள் மாவட்டத்திற்கே ஒதுக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரைவைக்காக செங்கல்பட்டு மாவட்டத்திற்கு அனுப்பப்படுகிற நெல்லை அவர்களுடைய மாவட்டத்திற்கே ஒதுக்கப்பட்டதாகக் கொள்ளக்கூடாது.

திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : தஞ்சை மாவட்டத்தில் இருந்து கொள்முதல் செய்து பல இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆயினும் நாகப்பட்டினம் போன்ற இடங்களில் அரிசி கிடைக்காதபோது அதிகாரிகளைக் கேட்டால் மற்ற இடங்களுக்கு அனுப்பத்தான் இங்கே அரிசி வைக்கப் பட்டிருக்கிறது, உள்ளூருக்கு அல்ல என்கிறார்கள். இதுபோல அரிசி கிடைக்காத சமயங்களிலாவது இந்தப் பகுதிக்கு கொடுத்ததுபோக பாக்கியை மற்ற இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : தஞ்சை மாவட்டத்திலேயே பற்றாக்குறை என்று திரு. ஞானசம்பந்தம் இப்போதுதான் சொல்கிறார்கள். நாம் அங்குள்ள நெல் முழுவதையும் கொள்முதல் செய்வதில்லை. அந்த மாவட்டத்தின் தேவைக்கானது போக உபரியாக உள்ளவற்றைத் தான் கொள்முதல் செய்கிறோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தஞ்சையைப் பொறுத்த வரையில் நாகப்பட்டினம், மன்னார்குடி போன்ற பகுதிகளில் அரைவைக்காக நெல் வைக்கப்படுகிறது. பொதுவாக எங்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்